**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**
**2023 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**வ.வி.எண்.5/2022 இன் மே.மு.வ.எண்.15/2020**

1. ரத்தினம்மாள்
2. பாண்டியராஜ்
3. சலுகைச்சாமி(இறப்பு) ... மனுதாரர்கள்/அப்பீல்வாதிகள்

(அப்பீல்வாதிகள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் தங்களுக்காகவும் அருப்புக்கோட்டை நேரு மைதானம் மேலரத வீதியில் வசிக்கும் பொதுமக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும்)
(வ,வி. எண்.7/2022 மனுவில் கடந்த 27.09.2022 ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி மனு சீர்திருத்தம் செய்யப்பட்டது)

4. கௌசல்யாதேவி
5. நிர்மலாதேவி
6. கார்த்திகைசெல்வி
7. சந்திரா ... 4 முதல் 7 மனுதாரர்கள்/சேர்க்கப்பட வேண்டிய 4 முதல் 7 அப்பீல்வாதிகள் இறந்த 3 ம் அப்பீல்வாதியின் வாரிசுகள்

/எதிர்/

1. கிருஷ்ணன்(இறப்பு)
2. சடாச்சரவேல்
3. ஆணையாளர்,
   அருப்புக்கோட்டை நகராட்சி
   அருப்புக்கோட்டை ... எதிர்மனுதாரர்கள்/அப்பீல்பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 13.06.2023 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பெருமாள்சாமி அவர்கள் ஆஜரானநிலையிலும் 2 ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.என். சோலைராஜ் அவர்கள் ஆஜரானநிலையிலும் 3 ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சங்கரன் அவர்கள் ஆஜரான நிலையிலும் 1 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதி மன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது இறந்துபோன அப்பீல் 3ம் வாதியான சலுகைச்சாமியின் வாரிசுகளை இந்த மேல்முறையீட்டு வழக்கில் 4 முதல் 7 அப்பீல்வாதிகளாக சேர்த்துக் கொள்ள அனுமதி கோரி சிபிசி ஆர்டர் 22 ரூல் 3 மற்றும் சிபிசி 151 பிரிவின்கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:–

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மேல்முறையீடு வழக்கு நிலுவையில் உள்ள காலத்தில் அப்பீல் 3ம் வாதி சலுகைச்சாமி என்பவர் 25.12.2021ம் தேதி இறந்துவிட்டார். இறந்துபோன அப்பீல் 3ம் வாதிக்கு மனைவி மற்றும் குழந்தைகள் வாரிசுகளாக உள்ளனர். இறந்த அப்பீல் 3ம் வாதிக்கு மேல்முறையீட்டு வழக்கில் கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் எல்லாம் அவருடைய வாரிசுகளுக்கு கிடைக்கக் கூடியதாக உள்ளதால் இறந்துபோன அப்பீல் 3ம் வாதியான சலுகைச்சாமியின் வாரிசுகளை இந்த மேல்முறையீட்டு வழக்கில் 4 முதல் 7 அப்பீல் வாதிகளாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிடவேண்டும்.

3.2ம் எதிர்மனுதாரர்தரப்பு மறுப்புரை மற்றும் கூடுதல் மறுப்புரையின் சுருக்கம்:–

(i) மனு ஆட்சேபிக்கப்படுகிறது. சட்டப்படி செல்லாது. மனு அமைக்கப்பட்ட விதம் சரியல்ல. மனுதாரர்கள் பெயரில் முதலில் போடப்படவில்லை. இவ்வழக்கில் உள்ள அப்பீல்வாதிகள் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஆனால் குறுந்தலைப்பில் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுபோல் காண்பிக்கப்பட்டுள்ளது. 2 முதல் 5 பிரதிவாதிகள் தங்களுக்காகவும் அருப்புக்கோட்டை டவுண் நேரு மைதானம் மேலரத வீதியைச் சேர்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில்தான் சேர்க்கப்பட்டார்கள். எனவே இறந்துபோன 3ம் அப்பீல்வாதியின் வாரிசுகளுக்கு தனிப்பட்ட முறையில் வழக்குச் சொத்தில் பாத்தியம் வராது. வாரிசுமுறையில் உரிமை வராது. இறந்துபோன 3ம் வாதிக்காக மற்ற இரண்டு அப்பீல்வாதிகள் தொடர்ந்து மேல்முறையீட்டை நடத்தலாம். அல்லது 3ம் அப்பீல்வாதிக்காக வேறு யாராவது ஒருவரை substitute செய்யலாம். ஆர்டர் 22 ரூல் 3 இந்த வழக்கிற்கு பொருந்தாது. மனுதாரர்கள் யாரும் அபிடவிட்டில் கையெழுத்து

போடவில்லை. 1,2 அப்பீல்வாதிகள் மனுதாரர்களாக காண்பிக்கப்படவில்லை. எக் கோணத்தில் வைத்துப் பார்த்தாலும் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல. மேல்முறையீட்டு முகாந்திரத்திலும் அப்பீல் மேல்முறையீடுதாரர்கள் தனிப்பட்ட மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாகத்தான் கூறப்பட்டுள்ளது. எனவே அப்பீல்மேல் முறையீடும் செல்லாது. எனவே மனுதாரர்களின் மனுவை 2ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

(ii) இந்த எதிர்மனுதாரருக்கு சார்பான சீர்திருத்தம் செய்யப்பட்ட மனுவில் வ.வி.எண்.7/2022 மனுவில் அனுமதி கோரப்பட்ட சீர்திருத்தங்கள் எதுவுமே செய்யாமல் இந்த எதிர்மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனு சட்டப்படி செல்லாது.

4. 3ம் எதிர்மனுதாரர்தரப்பில் மனுதாரர்களின் மனுவிற்கு மறுப்புரை இல்லை என்று மனுவில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில், மனுதாரர்கள் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாகவும் வழக்கு நிலுவையில் உள்ள காலத்தில் 3ம் அப்பீல்வாதி சலுகைச்சாமி என்பவர் கடந்த 25.12.2021ம் தேதி இறந்துவிட்டதாகவும் எனவே அவருக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் எல்லாம் அவருடைய வாரிசுகளான 4 முதல் 7 மனுதாரர்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருப்பதால் 4 முதல் 7 மனுதாரர்களை அசல் மேல்முறையீட்டு வழக்கில் 4 முதல் 7 அப்பீல்வாதிகளாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதியளிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. 2ம் எதிர்மனுதாரர்தரப்பில் இவ்வழக்கில் உள்ள அப்பீல்வாதிகள் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும் ஆனால் குறுந்தலைப்பில் தனிப் பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுபோல் காண்பிக்கப்பட்டுள்ள தாகவும் எனவே இறந்துபோன 3ம் அப்பீல்வாதியின் வாரிசுகளுக்கு தனிப்பட்ட முறையில் வழக்குச் சொத்தில் பாத்தியம் வராது என்றும் இறந்துபோன 3ம் வாதிக்காக

மற்ற இரண்டு அப்பீல்வாதிகள் தொடர்ந்து மேல்முறையீட்டை நடத்தலாம் அல்லது 3ம் அப்பீல்வாதிக்காக வேறு யாராவது ஒருவரை substitute செய்யலாம் என்றும் ஆர்டர் 22 ரூல் 3 இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றும் கூறப்பட்டுள்ளது.

8. 3ம் எதிர்மனுதாரர்தரப்பில் மனுதாரர்களின் மனுவிற்கு மறுப்புரை இல்லை என்று மனுவில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

9. கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. 2ம் எதிர்மனுதாரர்தரப்பில் இவ்வழக்கில் உள்ள அப்பீல்வாதிகள் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்ய வில்லை என்றும் ஆனால் குறுந்தலைப்பில் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுபோல் காண்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மனுதாரர்தரப்பில் மனுவை சீர்திருத்தம் செய்ய மனுத்தாக்கல் செய்து 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கூறப்பட்ட சங்கதிகள் சீர்திருத்தம் செய்யப்பட்டு மனு சீர்திருத்தம் செய்யப் பட்டுள்ளது. மேலும் 2ம் எதிர்மனுதாரர்தரப்பில் இறந்துபோன 3ம் அப்பீல்வாதியின் வாரிசுகளுக்கு தனிப்பட்ட முறையில் வழக்குச் சொத்தில் பாத்தியம் வராது என்றும் இறந்துபோன 3ம் வாதிக்காக மற்ற இரண்டு அப்பீல்வாதிகள் தொடர்ந்து மேல்முறை யீட்டை நடத்தலாம் அல்லது 3ம் அப்பீல்வாதிக்காக வேறு யாராவது ஒருவரை substitute செய்யலாம் என்றும் ஆர்டர் 22 ரூல் 3 இந்த வழக்கிற்கு பொருந்தாது என்று கூறியிருந்தாலும் மேற்படி சங்கதிகள் குறித்து மேல்முறையீட்டு விசாரணையின்போது முடிவு செய்து கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்துபோன 3ம் அப்பீல்வாதியின் வாரிசுகளுக்கு தனிப்பட்ட முறையில் வழக்குச் சொத்தில் பாத்தியம் வராது என்று கூறப்பட்டுள்ளதே தவிர அசல் மேல்முறை யீட்டு வழக்கில் கண்ட 3ம் அப்பீல்வாதி சலுகைச்சாமிக்கு 4 முதல் 7 மனுதாரர்கள் வாரிசுகள் இல்லை என்பதாக எவ்வித கூற்றும் மறுப்புரையில் கூறப்படவில்லை.

10. எனவே மேற்கூறப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் பார்க்கும்போது, மனுதாரர்தரப்பில் இறந்துபோன 3ம் அப்பீல்வாதியின் வாரிசுகளான 4 முதல் 7 மனுதாரர் களை அசல் அப்பீல் வழக்கில் 4 முதல் 7 அப்பீல்வாதிகளாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்தவேண்டும் என்று கூறியுள்ளனர். எதிர்மனுதாரர்தரப்பில் மனுதாரரின் மனுவை மறுத்து மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும் மனுதாரர்களை இறந்துபோன 3ம் அப்பீல்வாதி சலுகைச்சாமியின் வாரிசுகள் இல்லை என்பதாக மறுத்து

எவ்வித கூற்றும் கூறப்படவில்லை. எதிர்மனுதாரர்கள்தரப்பில் மனுதாரர்களின் மனுவினை மறுத்து இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து வேறு கடுமையான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 21.07.2023 ம் தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.5/22 இன்
மே.மு.வ.எண்.15/20
உத்தரவு நாள் – 21.07.2023